# T20 Current Affairs

# for

# TNPSC

# Jun - 2022

Towards Your Success


## THULIRR IAS ACADEMY

# 1923 B, H Block 2nd Street, 12th Main Road,

Anna Nagar West, Chennai – 40

http://thulirracademy.in/ | Mobile # +91 944 506 5552 | Telegram: Thulirr Current Affairs

# Table of Contents


தமிழக நிகழ்வுகள் ....................3
இந்திய நிகழ்வுகள் ....................8
திருவிழா ....................14
பொருளாதாரம் ....................14
உலக நிகழ்வுகள் ....................16
சுற்றுச்சூழல் ....................17
அறிவியல் & தொழில்நுட்பம் ....................17
முக்கிய நபர்கள் & நியமனங்கள் ....................18
திட்டம் ....................20
மாநாடுகள் ....................23
பாதுகாப்பு ....................25
கூட்டுப்பயிற்சி ....................26
விருதுகள் ....................26
விளையாட்டு நிகழ்வுகள் ....................27
புள்ளிவிவரம் ....................28
புத்தகம் ....................30
முக்கிய தினம் ....................31



**T20 Monthly Current Affairs Available in our Website**

**Click here to FREE download**

http://www.thulirraacademy.in/currentaffairs.php?ca_category=T20-T

## தமிழக நிகழ்வுகள்

❖ **சென்னை துறைமுகத்தில் இருந்து சொகுசு கப்பல் சுற்றுலா**

➢ சென்னை துறைமுகத்தில் இருந்து 'எம்பிரஸ்' எனும் சொகுசு கப்பலை அறிமுகம் செய்து, அதை மக்களின் சொகுசு கப்பல் பயன்பாட்டை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் துறைமுகத்தில் தொடங்கி வைத்தார்.

❖ **கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது - ஆரூர்தாஸ்**

➢ கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது-2022 வசனகர்த்தா ஆரூர்தாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

❖ **'அவுட் ஆஃப் தி பாக்ஸ் திங்கிங்' பாடத்திட்டம் அறிமுகம்**

➢ கணிதம் மூலம் மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றல் மற்றும் புதிய சிந்தனைகளை ஊக்குவிக்கும் வகையில் "அவுட் ஆஃப் தி பாக்ஸ் திங்கிங்" ('Out of the Box Thinking') பாடத்திட்டத்தினை பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் நோக்கில் சென்னை ஐஐடி அறிமுகம் செய்துள்ளது.

➢ ஐஐடி மெட்ராஸ் ப்ரவர்த்தக் டெக்னாலஜிஸ் பவுண்டேஷன் மூலம் கட்டணமின்றி ஆன்லைனில் இந்தப் பாடத்திட்டம் கற்பிக்கப்படுவதுடன் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு கிரேடு சான்றிதழும் வழங்கப்படும்.

➢ முதல் முறையாக ஜூலை 1, 2022 அன்று வகுப்புகள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

❖ **'அனைத்தும் சாத்தியம்' மாற்றுத் திறனாளிகள் அருங்காட்சியகம்**

➢ அனைத்தும் சாத்தியம் என்ற மாற்றுத் திறனாளிக்கான அருங்காட்சியகத்தை சென்னை, காமராஜர் சாலையில் மாற்றுத்திறனாளிகள் ஆணையர் அலுவலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

❖ **தமிழ்நாட்டின் 235-வது சமத்துவபுரம் - சிங்கம்புணரி**

➢ சிவகங்கையில் சிங்கம்புணரி அருகில் அமைக்கப்பட்டுள்ள 235-வது பெரியார் நினைவு சமத்துவபுரத்தை முதல்வர் ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

❖ **தமிழ்நாட்டில் ரூ.1,627.83 கோடி மதிப்பீட்டிலான பாரத்நெட் திட்டம்**

➢ ஜூன் 10, 2022 அன்று தமிழ்நாட்டில் ரூ. 1,627.83 கோடி மதிப்பீட்டிலான 'பாரத்நெட்' திட்டத்தை செயல்படுத்தும் விதமாக கன்னியாகுமரி மாவட்டம், முத்தலகுறிச்சி கிராமப் பஞ்சாயத்தில் கண்ணாடி இழை கம்பி வடம் (Optical fiber cable) பதிக்கும் பணியினை முதல்வர் மு. க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

➢ 'பாரத்நெட்' திட்டம் என்பது, தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளையும் 'கண்ணாடி இழை கம்பி வடம்' மூலம் இணைத்து, அதிவேக அலைக்கற்றை வழங்கும் திட்டமாகும்.

➢ இத்திட்டம், தமிழ்நாடு அரசின் "தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனம் (TANFINET)" என்ற சிறப்பு நோக்கு நிறுவனம் வாயிலாக செயல்படுத்தப்படுகிறது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இத்திட்டத்தின் மூலம் குறைந்தபட்சம் 1 Gbps அளவிலான அலைக்கற்றை அனைத்து 12,525 கிராமப் பஞ்சாயத்துகளுக்கும் வழங்கப்படும்.
- இத்திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த விலையில் மின்னணு (டிஜிட்டல்) சேவைகள், இணையவழி கல்வி (e-Education), தொலை மருத்துவம் (Telemedicine), இணையதள இணைப்பின் மூலம் வழங்கப்படும் சேவைகளான Triple Play Services (தொலைபேசி, தொலைக்காட்சி & இணையம்) ஆகியவற்றை வழங்க இயலும். மேலும், அரசு அலுவலகங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தொழில் நிறுவனங்கள், அதிவேக இணையதள சேவையினைப் பெறுவதன் மூலம் கிராம அளவில் அரசின் பல்வேறு திட்டங்கள் மக்களை விரைந்து சென்றடையும். அதோடு, புதிய ஊரக வேலைவாய்ப்புகளை உருவாக்கி பொருளாதார நிலை மேன்மையடையவும் இத்திட்டம் வழி வகுக்கும்.

**❖ சார்ஜாவில் 11 ஆம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு**

- உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் 11-வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு சார்ஜாவில் 2023-ம் ஆண்டு ஜூலையில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- 2019-ம் ஆண்டு சிகாகோவில் 10வது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்று இருந்தது. உலகத் தமிழ் ஆராய்ச்சி 1966-ம் ஆண்டு முதல் உலகத் தமிழ் மாநாடுகள் நடத்தப்பட்டு வருகிறது.

**❖ தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் இன்னோவேஷன் மிஷன்(S2G Buy Day)**

- தொழில்முனைவோர் மத்தியில் டான்சிம் (TANSIM) என்று அழைக்கப்படும் தமிழ்நாடு ஸ்டார்ட்அப் மற்றும் இன்னோவேஷன் மிஷன், ஸ்டார்ட்-அப்களையும் அரசாங்கத்தையும் இணைக்க கொள்முதல் நாள் (S2G buy day) என்ற முயற்சியைத் தொடங்கியுள்ளது.
- இது தொடர்பான அறிவிப்பு, 2022-23 தமிழ்நாடு பட்ஜெட்டின் போது, மாநிலத்தில் உள்ள ஸ்டார்ட் அப் நிறுவனங்களிடமிருந்து ரூ.50 லட்சம் மதிப்பிலான புதுமையான பொருட்கள் மற்றும் சேவைகளை நேரடியாக கொள்முதல் செய்ய அரசு துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் அனுமதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

**❖ செயற்கை கருத்தரிப்பு தொழில்நுட்ப சட்டத்தை அமுல்படுத்த சிறப்பு குழு**

- செயற்கை கருத்தரிப்பு தொழில்நுட்பச் சட்டம் மற்றும் வாடகைத் தாய் ஒழுங்குமுறைச் சட்டத்தை தமிழகத்தில் அமல்படுத்துவதற்காக சிறப்புக் குழுவை அரசு அமைத்துள்ளது.
- மாநில அளவில் சுகாதாரத் துறை கூடுதல் செயலர் தலைமையிலும், மாவட்ட அளவில் இணை இயக்குநர்கள் தலைமையிலும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன

**❖ இந்தியாவிலேயே முதல் முறையாக திருநங்கைகள் மையம்-மதுரை**

- இந்தியாவிலேயே முதல் முறையாக மதுரை சின்ன சொக்கிகுளம் பகுதியில் திருநங்கைகளுக்காக திறக்கப்பட்ட ஆய்வு மற்றும் ஆவண மையம் திறக்கப்பட்டுள்ளது.
- மதுரை விஸ்வநாதபுரம் பகுதியில் திருநங்கைகளுக்கான முதல் நூலகம் சில ஆண்டுகளுக்கு முன்பாக துவங்கப்பட்டது.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இதில் மூன்றாம் பாலினத்தவரின் மீது சமுகத்திற்கு இருக்கும் கருத்தை மாற்ற வேண்டும் என்பதற்காக திருநங்கை, திருநம்பி எழுத்தாளர்களை ஊக்குவித்து அவர்களின் எழுத்துக்களாக நூல்களாக மாற்றுவது, திறமை உள்ள திருநம்பி மற்றும் திருநங்கைகளை கண்டறிந்து அவர்களுக்கான களத்தை அமைத்துக் கொடுப்பதற்காக இந்த ஆய்வு மற்றும் ஆவண மையம் திறக்கப்பட்டு உள்ளது.

❖ **பெண் தொழில் முனைவோர் தொழிலணங்கு நிகழ்ச்சி**

- மதுரையில் தமிழ்நாடு தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் சார்பில் பெண் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் "தொழிலணங்கு" நிகழ்ச்சி நடந்தது.
- இதில் நிதி மற்றும் மனிதவள மேலாண்மை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் கலந்து கொண்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

❖ **'எண்ணும் எழுத்தும்' திட்டம்**

- ஜூன் 13, 2022 அன்று 'எண்ணும் எழுத்தும்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திருவள்ளூர் மாவட்டம் புழல் அருகே அழிஞ்சிவாக்கம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் தொடக்கி வைத்தார்
- வரும் 2025-ம் ஆண்டுக்குள் மாணவர்கள் எழுத்தறிவு மற்றும் எண்ணறிவை பெற வேண்டும் என்பதே இந்த திட்டத்தின் நோக்கமாகும்.
- தமிழகத்தில் உள்ள ஒன்று முதல் மூன்று வகுப்புகளில் தமிழ், ஆங்கிலம், கணக்குப் பாடங்கள், சூழ்நிலையியல் பாடக்கருத்துகளுடன் ஒருங்கிணைந்து கற்பிக்கப்படும்.
- இந்த திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள அனைத்து மாணவர்களும் 8 வயதிற்குள் பொருள் புரிந்து படிக்கும் திறனையும், அடிப்படை கணிதச் செயல் பாடுகளை செய்யும் திறன்களையும் பெற்றிருக்க வேண்டும்.

❖ **இந்தியாவில் முதல் தனியார் ரயில் சேவை: கோவை- சீரடி**

- ஜூன் 14, 20222 அன்று இந்தியாவிலேயே முதல் முறையாக தனியார் வசம் ஒப்படைக்கப்பட்டு, கோவையில் இருந்து சீரடிக்கு இயக்கப்படும் சிறப்பு ரெயில் கோவையில் இருந்து முதல் பயணத்தை தொடங்கியது.
- வாரம் ஒரு முறை செல்லும் இந்த ரெயிலில் டிக்கெட் முதல் பராமரிப்பு பணிகள் வரை தனியார் நிறுவனமே மேற்கொள்ள உள்ளது.

❖ **டிரைம்ப் உலக சாதனை பெற்ற திருவள்ளூர் உணவுத் திருவிழா**

- திருவள்ளூர் மாவட்டத்தில் உணவுத் திருவிழா நடைபெற்றது. இதில் பல்வேறு உணவகங்களில் இருந்து ஒரு லட்சம் லிட்டர் உபயோகித்த சமையல் எண்ணெயை பயோ-டீசலாக மாற்றும் வகையில் ஒரேநாளில் பெறப்பட்டது. மேலும் ஒரு லட்சம் நபர்களுக்கு உபரி உணவு ஒரேநாளில் வழங்கினர். இதற்காக 'டிரைம்ப் உலக சாதனை' சான்றிதழ் வழங்கப்பட்டது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியம் தலைவர் - எர்ணாவூர் நாராயணன்**
  - எர்ணாவூர் நாராயணன் தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
  - தமிழகத்தில் பனைமர தொழிலாளர்களின் நலனுக்காக செப்டம்பர் 10, 2006 அன்று கலைஞரால் தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர் நல வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. இதில் பதிவு செய்த உறுப்பினர்களுக்கு கல்வி, மகப்பேறு, திருமணம், விபத்து உதவித்தொகை உள்ளிட்ட பல நலத்திட்டங்கள் வழங்கப்படுகிறது.

THULIRR
IAS ACADEMY
துண்பொருள் காண்ப தறிவு | முயற்சி திருவினையாக்கும்
TNPSC
GROUP II / II A
ONLINE / OFFLINE MAINS TEST BATCH
ADMISSION GOING ON
CHENNAI - 9445065552 / 9445095552
KOVILPATTI - 9444206805 / 9444206905

- **நீதிபதி முருகேசன் தலைமையில் மாநில கல்விக் கொள்கை குழு**
  - தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கை (பொறியியல், மருத்துவம் உள்ளிட்ட தொழறப்படிப்புகளில் அரசு பள்ளி மாணவர்களின் சேர்க்கை) குறித்து ஆராய தில்லி உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி த.முருகேசன் தலைமையில் 13 பேர் கொண்ட ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது.
- **ஊட்டி மலை ரெயிலில் முதல் பெண்ணாக பிரேக்ஸ் உமன் நியமனம்**
  - ஆசியாவிலேயே மிக செங்குத்தான மலை ரெயில் பாதையில் செல்லும் நீலகிரி மலை ரெயிலில் முதன் முதலாக பிரேக்ஸ் மென்னுக்கு பதிலாக பிரேக்ஸ் உமன் பணிக்கு சிவஜோதி என்ற பெண்மணியை ரெயில்வேத்துறை நியமனம் செய்துள்ளது.
  - மேட்டுப்பாளையத்தில் இருந்து உதகைக்கு 1899-ம் ஆண்டு முதல் மலை ரயில் சேவை தொடங்கியது.
  - பழமை வாய்ந்த மலை ரெயிலை கடந்த 2005-ம் ஆண்டு யுனெஸ்கோ நிறுவனம் உலக பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **மாலனுக்கு மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதெமி விருது**
  - 2021-ம் ஆண்டிற்கான மொழிபெயர்ப்புக்கான சாகித்ய அகாதெமி எழுத்தாளர் மாலனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
  - 'ஒரு பிணந்தூக்கியின் வரலாற்றுக் குறிப்புகள்' என்ற நூலுக்காக மாலன் (வி.நாராயணன்) தமிழில் மொழிபெயர்த்தற்க்காக இவ்விருது அறிவிக்கப்பட்டுள்ளது.
  - ஒரு பிணந்தூக்கியின் வரலாற்றுக் குறிப்புகள் நூலானது சைரஸ் மிஸ்திரி எழுதிய ஆங்கில நாவலான 'க்ரோனிக்கல் ஆஃப் கார்ப்ஸ் பேரியர்' எனும் ஆங்கில நாவலை மொழிபெயர்த்து உருவாக்கப்பட்டது.
- **கல்லூரி கனவு நிகழ்ச்சி**
  - ஜூன் 25, 2022 அன்று நான் முதல்வன்" திட்டத்தின் கீழ், 12-ம் வகுப்பு பயின்ற மாணவர்களுக்கு உயர்கல்விக்கு வழிகாட்டும் வகையில், "கல்லூரி கனவு" நிகழ்ச்சியை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடக்கிவைத்தார்.
  - தொடக்க நிகழ்ச்சியின்போது, முதலமைச்சர் முன்னிலையில் HCL நிறுவனத்திற்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.
  - இதன்படி, அரசுப் பள்ளிகளில் படித்த 2 ஆயிரத்து 500 மாணவ, மாணவிகளை தகுதியின் அடிப்படையில் ஹெச்.சி.எல்., நிறுவனம் தேர்வுசெய்து, பயிற்சி மற்றும் பணி ஆணை வழங்கவும், பயிற்சிக்கான செலவை அரசு ஏற்பதுடன், பட்ட மேற்படிப்பினை பயில வாய்ப்பு வழங்கப்படும் என்பதும் உறுதிசெய்யப்பட உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.
- **நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி-தமிழ்நாடு 2-வது இடம்**
  - தமிழ்நாடு மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவில் இரண்டாவது பெரிய மாநிலமாக உள்ளது. தமிழ்நாடு அரசு மாநில வரி வருமானத்தில், இந்தியாவில் நான்காவது இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டின் தனி நபர் வருமானம் பெரும்பான்மையான இந்திய மாநிலங்களோடு ஒப்பிடுகையில் அதிகமாக உள்ளது.
  - மொத்த மின்சார உற்பத்தியில், காற்றலை வாயிலாக அதிக பங்களிப்பை வழங்குவதில் தமிழகம் உலக அளவில் ஒன்பதாம் இடத்தில் உள்ளது.
  - நாட்டின் மொத்த ஜவுளி உற்பத்தி நிறுவனங்களில் மூன்றில் ஒரு பகுதி நிறுவனங்கள் அமைந்திருப்பதன் மூலம் தமிழகம், இந்தியாவின் ஜவுளி பள்ளத்தாக்காகவும், மொத்த நூல் உற்பத்தியில் நாற்பது சதவீதத்தை பெற்றிருப்பதன் மூலம் இந்தியாவின் நூல் கிண்ணமாகவும் திகழ்கிறது.
- **ரூ.2.62 லட்சம் கோடி ஏற்றுமதி; மூன்றாம் இடத்தில் தமிழகம்**
  - 2021 - 22ம் நிதியாண்டில் 2.62 லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஏற்றுமதியுடன் தமிழகம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது. நாட்டின் மொத்த ஏற்றுமத்தியில் தமிழகத்தின் பங்கு 8.34 சதவீதமாக உயர்ந்துள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- 9.45 லட்சம் கோடி ரூபாய் மதிப்புடன் குஜராத் மாநிலம் முதல் இடத்திலும் 5.45 லட்சம் கோடி ரூபாய் மதிப்பில் மகராஷ்டிரா மாநிலம் இரண்டாவது இடத்திலும் உள்ளன.

❖ **ஆன்லைன் ரம்மிக்கு எதிராக புதிய சட்டம் - நீதிபதி சந்துரு குழு**

- ஆன்லைன் ரம்மி விளையாட்டிற்கு எதிராக புதிய சட்டத்தை கொண்டு வர வேண்டும் என்று பரிந்துரை செய்து, ஓய்வுபெற்ற நீதிபதி சந்துரு தலைமையிலான குழு தனது அறிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் அளித்துள்ளது.

❖ **கலைஞர் எழுதுகோல் விருது**

- 2021-ஆம் ஆண்டிற்கான 'கலைஞர் எழுதுகோல் விருதுக்கு மூத்த பத்திரிகையாளர் ஐ.சண்முகநாதன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

❖ **மாநில உணவு பாதுகாப்பு குறியீடு பட்டியல் - தமிழகம் முதலிடம்**

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் மாநில உணவு பாதுகாப்பு குறியீட்டில் பெரிய மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.
- குஜராத் 2-வது இடம், மகாராஷ்டிரா 3-வது இடத்தை பிடித்துள்ளது. சிறிய மாநிலங்கள் பட்டியலில் கோவா முதலிடம், மணிப்பூர் 2-வது இடம், சிக்கிம் 3-வது இடத்தை பிடித்துள்ளது.
- தமிழ்நாட்டில் திருவள்ளூர், காஞ்சிபுரம், சேலம் கோயம்புத்தூர், சென்னை, திருநெல்வேலி, ஈரோடு, மதுரை, தூத்துக்குடி, திருப்பூர், திண்டுக்கல் ஆகிய 11 மாவட்டங்கள் சிறந்த செயல்பாட்டிற்கான விருதினையும் பெற்றன.
- 2022-ம் ஆண்டு கருப்பொருள் "பாதுகாப்பான உணவு, சிறந்த ஆரோக்கியம்". ஜூன் 7 - உணவு பாதுகாப்பு தினம்.

❖ **ஆஸ்கர் விருது தேர்வுகுழு உறுப்பினராக நடிகர் சூர்யாவுக்கு அழைப்பு**

- ஆஸ்கர் விருதுக்கு திரைப்படங்களை தேர்வு செய்யும் குழுவின் உறுப்பினராக நடிகர் சூர்யாவிற்கு ஆஸ்கர் அகடமி அழைப்பு விடுத்துள்ளது. 397 பேரில் நடிகர் சூர்யா மற்றும் பாலிவுட் நடிகை கஜோலின் பெயரும் இடம்பெற்றுள்ளது. தமிழ் சினிமாவில் ஆஸ்கர் அகாடமியின் உறுப்பினராக அழைப்பு விடுக்கப்பட்டுள்ள முதல் நபராக நடிகர் சூர்யா உள்ளார்.

## இந்திய நிகழ்வுகள்

❖ **இந்தியா-வங்காளதேசம் இடையிலான 'மிதாலி எக்ஸ்பிரஸ்' ரெயில் சேவை**

- ஜூன் 1, 2022 அன்று இந்தியாவின் மேற்கு வங்காளத்தின் நியூ ஜல்பைகுரி நிலையத்தில் இருந்து வங்காளதேசத்தில் உள்ள டாக்காவிற்கு செல்லும் "மிதாலி எக்ஸ்பிரஸ்" தனது முதல் பயணத்தைத் தொடங்கியது.
- மைத்ரீ எக்ஸ்பிரஸ் (டாக்கா-கொல்கத்தா) மற்றும் பந்தன் எக்ஸ்பிரஸ் (குல்னா-கொல்கத்தா) ஆகியவற்றுக்குப் பிறகு இது மூன்றாவது பயணிகள் ரயில் ஆகும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **இந்தியாவின் முதலாவது விலங்குகளுக்கான கோவிட்-19 தடுப்பூசி**
  - நாட்டில் முதல்முதலாக விலங்குகளுக்கான கோவிட்-19 தடுப்பூசியை வேளாண்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தொடங்கி வைத்தார். இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட இந்த தடுப்பூசிக்கு அனகோவாக்ஸ் (Anocovax) எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஹரியானா மாநிலத்தைச் சேர்ந்த இந்திய வேளாண் ஆய்வு கழகம் ICAR (Indian Council of Agricultural Research) இதை உருவாக்கியுள்ளது.
- **2020 ஆம் ஆண்டில் நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் 28 ஆக குறைவு**
  - 2020 ஆம் ஆண்டில், இந்தியப் பதிவாளர்-ஜெனரலின் (Registrar - General of India) தரவுகளின்படி, இந்தியாவில் குழந்தை இறப்பு விகிதம் (IMR) 28 (1,000 பிறப்புகளுக்கு 28 குழந்தை இறப்புகள்) 28-ஆகக் குறைந்துள்ளது.
  - ஒரு குறிப்பிட்ட பகுதியில் பிறக்கும் 1,000 குழந்தைகளில் ஓராண்டை எட்டுவதற்குள் எத்தனை குழந்தைகள் இறக்கின்றன என்பதே குழந்தை இறப்பு விகிதம் எனக் கணக்கிடப்படுகிறது.
  - ஒட்டுமொத்தமாக, கடந்த பத்தாண்டுகளில் அகில இந்திய அளவில் குழந்தை இறப்பு விகிதம் 44ல் இருந்து 28 ஆகக் குறைந்துள்ளது. கிராமப்புறங்களில் 48 முதல் 31 ஆகவும், நகர்ப்புறங்களில் இந்த எண்ணிக்கை 29ல் இருந்து 19 ஆக குறைந்துள்ளது.
  - எனினும், இந்தியாவில் 36 குழந்தைகளில் ஒரு குழந்தை ஓர் ஆண்டுக்குள் இறக்கும் சூழல் நிலவுவதாக தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - கிராமம் மற்றும் நகரப்பகுதிகளில் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தை இறப்பு விகிதம் சுமார் 35 சதவீதம் குறைந்துள்ளது.
  - 2020-ம் ஆண்டில் அதிகபட்ச எண்ணிக்கையாக மத்திய பிரதேச மாநிலத்தில் 1000-க்கு 43 குழந்தைகள், பிறந்த ஒரு வருடத்தில் இறந்துள்ளன. மிசோரமில்தான் குறைந்த எண்ணிக்கையாக 1000 குழந்தைகளில் 3 குழந்தைகள் ஒரு வருடத்துக்குள் இறந்துள்ளன.
  - நாட்டில் பிறப்பு விகிதமும் தொடர்ந்து குறைந்து வருகிறது. கடந்த 1971-ஆம் ஆண்டில் குழந்தைகள் பிறப்பு விகிதம் 36.9 ஆக இருந்துள்ளது. அது 2020-ல் 19.5 ஆக குறைந்திருக்கிறது. இது கிராமப்புறங்களில் 23.3-ல் இருந்து 21.1 ஆக குறைந்துள்ளது. நகர்ப்புறங்களில் 17.6-ல் இருந்து 16.1 ஆக சரிந்துள்ளது.
- **இந்தியாவின் முதல் கடல்நீரை உப்புநீக்கும் ஆலை**
  - இந்தியாவின் முதல் 100 MLD (ஒரு நாளைக்கு மில்லியன் லிட்டர்) திறன் கொண்ட உப்புநீக்கும் ஆலை (Desalination Plant) குஜராத்தின் பருச் மாவட்டத்தில் உள்ள தஹேஜ் தொழிற்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ளது
- **தேசிய அளவில் கல்வி அமைச்சர்கள் மாநாடு**
  - குஜராத்தில், மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் தலைமையில், தேசிய அளவில் கல்வி அமைச்சர்களுக்கான இரண்டு நாள் மாநாடு நடைபெற்றது. மாநாட்டை தமிழக அரசு புறக்கணித்தது குறிப்பிடத்தக்கதாகும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

❖ **இந்தியாவின் முதல் 'பாலிகா பஞ்சாயத்து' - குஜராத்**

- குஜராத்தின் கட்ச் மாவட்டத்தில் உள்ள ஐந்து கிராமங்களில் நாட்டின் முதல் 'பாலிகா பஞ்சாயத்து' தொடங்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியானது சிறுமிகளின் சமூக மற்றும் அரசியல் வளர்ச்சியை மேம்படுத்துவதையும், அரசியலில் அவர்கள் தீவிரமாக பங்கேற்பதை உறுதி செய்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- கட்ச் மாவட்டத்தின் குனாரியா, மஸ்கா, மொடகுவா மற்றும் வத்சர் கிராமங்களில் பஞ்சாயத்து தொடங்கியுள்ளது. 'பேட்டி பச்சாவோ பேட்டி படாவோ' பிரச்சாரத்தின் கீழ் குஜராத் அரசின் பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையால் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.
- பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமும் நாடு முழுவதும் பெண் பஞ்சாயத்தை தொடங்க திட்டமிட்டுள்ளது.

❖ **பேரிடர் மீட்சி கட்டமைப்புக்கான கூட்டணி**

- பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், பேரிடர் மீட்சி கட்டமைப்புக்கான கூட்டணியை (CDRI) 'சர்வதேச அமைப்பு'-ஆக வகைப்படுத்தவும், ஐநா (முன்னுரிமை & தற்காப்பு) சட்டம், 1947-ன்கீழ், விதிவிலக்குகள், தற்காப்பு மற்றும் முன்னுரிமைகளை வழங்குவதற்கு CDRI-யுடன் தலைமையக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- இந்த கூட்டமைப்பு தொடங்கப்பட்டதிலிருந்து 31 நாடுகள், 6 சர்வதேச அமைப்புகள் மற்றும் இரண்டு தனியார் நிறுவனங்கள் இந்த CDRI-யில் உறுப்பினராக இணைந்துள்ளன. பொருளாதார ரீதியாக முன்னேறிய நாடுகளை உறுப்பினராக சேர தொடர்ந்து முயற்சிப்பதன் மூலம் CDRI தனது உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரித்து வருகிறது

❖ **எல்லைப் பகுதிகளில் 'ப்ரோ கஃபே' எனும் சாலையோர வசதி**

- எல்லைப்பகுதி சாலைகள் அமைப்பின் ('BRO Cafes') மூலம் 12 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களின் 75 எல்லைப் பகுதிகளில் சாலையோர வசதிகளை ஏற்படுத்த பாதுகாப்பு அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது.
- உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவது தவிர, எல்லைப்பகுதிகளில் பொருளாதார செயல்பாடுகளை ஊக்குவிப்பதும், சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதி வாய்ப்புகளை வழங்குவதும் இவற்றின் நோக்கமாகும். சாலையோர வசதிகளுக்கான இவை ப்ரோ கஃபே என பெயரிடப்பட்டுள்ளன.
- சாலையோர வசதிகள் என்பது இரண்டு சக்கர, நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துதல், உணவு விடுதி, தங்கும் இடம், ஆடவர், மகளிர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு தனித்தனியான கழிப்பறைகள், முதலுதவி போன்றவையாகும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **மும்பை சமாச்சார் நாளிதழின் 200-வது ஆண்டு விழா**
  - ஃபர்துன்ஜீ மர்ஸ்பாஞ்ஜி என்பவரால் ஜூலை 1, 1822 அன்று மும்பை சமாச்சார், ஓர் வார நாளிதழாக அச்சாகத் தொடங்கியது. பிறகு 1832-ஆம் ஆண்டு, தினசரியாக அது மாறியது. 200 ஆண்டுகளாக இந்த பத்திரிக்கை தொடர்ந்து வெளிவருகிறது.
  - மும்பை சமாச்சார் நாளிதழின் 200-வது ஆண்டு விழாவில் பங்கேற்ற பிரதமர் மோடி இதன் தனித்துவமான சாதனையைப் போற்றும் வகையில், நிகழ்ச்சியின்போது ஓர் அஞ்சல் தலையும் வெளியியிட்டார்.
- **சூரத்தில் முதன் முதலாக இரும்புக் கசடால் 6 வழி நெடுஞ்சாலை**
  - மத்திய எஃகு துறை அமைச்சர் திரு. ராம்சந்திர பிரசாத் சிங் குஜராத் மாநிலம் சூரத்தில், நகரத்துடன் துறைமுகத்தை இணைக்கும், முதன் முதலாக இரும்புக் கசடால் அமைக்கப்பட்ட 6 வழி நெடுஞ்சாலையை தொடங்கிவைத்தார்.
  - 100% எஃகு கழிவைக் கொண்டு இந்தச் சாலை அமைக்கப்பட்டுள்ளதானது, எஃகு தொழிற்சாலைகளின் நிலைத் தன்மையை முன்னேற்ற உதவும் என்று கூறினார். இந்தப் பொருளைக் கொண்டு சாலை அமைப்பதால், அதன் உறுதித் தன்மை நீடிப்பதுடன், சாலை அமைப்பதற்கான செலவையும் வெகுவாகக் குறைக்கும் என்று அவர் கூறினார்.
- **எட்டாவது சர்வதேச யோகா தினம் - 2022**
  - ஜூன் 21, 2022 அன்று 8-வது சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்டது. பிரதமர் மோடி கர்நாடகாவில் உள்ள மைசூரு அரண்மனை மைதானத்தில் நடந்த சர்வதேச யோகா நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
  - இந்த ஆண்டுக்கான சர்வதேச யோகா தினத்தின் கருப்பொருள் ‘மனித குலத்திற்கான யோகா’ என்று பெயரிடப்பட்டது.
  - 2014ம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் சபையில் ஜூன் 21ம் தேதி சர்வதேச யோகா தினமாக அறிவிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
  - ஜூன் 21, 2015 அன்று முதல் சர்வதேச யோகா தினம் அனுசரிக்கப்பட்டது.
- **இந்தியா மற்றும் அமெரிக்கா: சுகாதாரத் துறையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்**
  - மத்திய அரசின் உயிரி தொழில்நுட்பத்துறை, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம், அமெரிக்காவின் சர்வதேச எய்ட்ஸ் தடுப்பூசி முன்னெடுப்பு, இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
  - உயிர்க் கொல்லி நோய், காசநோய், கொவிட் உள்ளிட்ட நோய்களைத் தடுப்பதற்கும், சிகிச்சை அளிப்பதற்கும், தேவையான புதிய உயிரி மருத்துவக் கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களை கண்டறிவதற்காக இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **ஆஸ்திரேலியா – இந்தியா நீர்ப்பாதுகாப்புத் திட்ட ஒப்பந்தம்**
    - நகர்ப்புற நீர் நிர்வாகத்தில் தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கு மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம், ஆஸ்திரேலியாவின் வெளியுறவு மற்றும் வர்த்தகத்துறை இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சர்கள் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் 2021 டிசம்பரில் கையெழுத்தானது.
- **எஸ் என் போஸ் தேசிய மையத்துடன் ஜெர்மனி நிறுவனம் ஒப்பந்தம்**
    - நவீன காந்தவியல் மற்றும் இடவியல் தொடர்பாக கொல்கத்தாவில் உள்ள அடிப்படை அறிவியலுக்கான எஸ் என் போஸ் தேசிய மையத்திற்கும், ஜெர்மனி நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
    - காந்தவியல் மற்றும் இடவியலில் நவீன ஞானத்தைப் பெறும் வாய்ப்புகளை வழங்குவதில், இந்திய – ஜெர்மன் இடையே ஒத்துழைப்பை அதிகரிப்பது இந்த கூட்டு முயற்சி இலக்காகும்.
- **வியட்நாம் நாட்டிற்கு 12 அதிவிரைவு பாதுகாப்புப் படகுகள்**
    - ஜூன் 9, 2022 அன்று வியட்நாம் நாட்டின் ஹாய் ஃபாங்கில் உள்ள ஹோங் ஹா கப்பல் கட்டும் தளத்திற்கு சென்ற பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், வியட்நாம் நாட்டிற்கு 12 அதிவிரைவு பாதுகாப்புப் படகுகளை வழங்கினார்.
    - இந்திய அரசு, வியட்நாம் நாட்டிற்கு 100 மில்லியன் அமெரிக்க டாலர் கடன் உதவியை வழங்கும் திட்டத்தின் கீழ் இந்தப் படகுகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.
    - முதல் ஐந்து படகுகள் இந்தியாவின் லார்சன் & டியூப்ரோ கப்பல் கட்டும் தளத்திலும், இதர 7 படகுகள் ஹோங் ஹா கப்பல் கட்டும் தளத்திலும் உருவாக்கப்பட்டன.
    - நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் ராஜ்நாத் சிங், பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வையான 'இந்தியாவில் தயாரித்தல், உலகிற்காக தயாரித்தல்' என்பதற்கு இந்தத் திட்டம் சிறந்த உதாரணம் என்று குறிப்பிட்டார்.
- **ஜப்பான் மற்றும் இந்தியா இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**
    - சுற்றுச்சூழல் ஆய்வுக்கான ஜப்பானின் தேசிய நிறுவனம் மற்றும் இந்தியாவின் ஆர்யபட்டா ஆய்வு நிறுவனம் இடையே கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
    - காற்றின் தரம் மற்றும் பருவநிலை மாற்றம் குறித்து கூட்டு ஆராய்ச்சியை நடத்தவும், அமலாக்கவும், இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது.
    - அறிவியல் கருவிகளின் கூட்டுப்பயன்பாடு மற்றும் இயக்கம், கண்காணிப்பு முறைகளில், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப தகவல் பரிமாற்றம், கூட்டான கல்வி மற்றும் ஆராய்ச்சி செயல்பாடுகள், ஆராய்ச்சி செய்வதன் நோக்கத்துடன் முனைவர் பட்டத்திற்கான மாணவர்கள் உட்பட ஆய்வாளர்கள் பரிமாற்றம், கூட்டான அறிவியல் பயிலரங்குகள் /



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

கருத்தரங்குகள் போன்றவை இந்த ஒப்பந்தத்தின் மூலம் சாத்தியமாகும் செயல்பாடுகளாகும்.

- **SCO - அமைப்பு: இளைஞர்கள் பணி செய்வதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தம்**
  - செப்டம்பர் 17, 2021 அன்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகளின் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளில் இளைஞர்கள் பணி செய்வதற்கான ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில், ஜூன் 14, 2022-ம் தேதி மத்திய அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுக்கள் துறை அமைச்சர் கையெழுத்திட்டார்.
  - பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்துவது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகளின் இளைஞர்களிடையே நட்புறவையும், ஒத்துழைப்பையும் வலுப்படுத்துவது இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும்
- **சிங்கப்பூர் வர்த்தக - தொழில் துறையுடன் இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தம்**
  - பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில், அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புதுமை கண்டுபிடிப்புத் துறைகளில் மத்திய அறிவியல்-தொழில்நுட்பத்துறை, சிங்கப்பூர் வர்த்தக - தொழில் துறையுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் பிப்ரவரி 2022-ல் கையெழுத்தானது.
  - புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குதல், மனிதவள பயிற்சி, ஒத்துழைப்புகள் மூலம் ஐ.பி. உற்பத்தி மேற்கொள்ள வழிவகுக்கும் நடைமுறையை வழங்குவதோடு, இருநாடுகளிலும் புதுமை கண்டுபிடிப்பு மற்றும் தொழில்முனைவு திறனை உருவாக்க உதவும்.
    1. வேளாண்மை மற்றும் உணவு அறிவியல் & தொழில்நுட்பம்;
    2. அதிநவீன உற்பத்தி மற்றும் பொறியியல்;
    3. பசுமைப் பொருளாதாரம், எரிசக்தி, தண்ணீர், பருவநிலை மற்றும் இயற்கை வளங்கள்;
    4. தரவு அறிவியல், பொறியியல் தொழில்நுட்பங்கள்;
    5. அதிநவீன சாதனங்கள்; மற்றும்
    6. சுகாதாரம் மற்றும் உயிரி தொழில்நுட்பம்
  - உள்ளிட்ட ஆராய்ச்சி, புதுமை கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மேம்பாடு போன்றவற்றில் முன்னேற்றத்தை விரைவுபடுத்தக் கூடிய பரஸ்பர நலன் சார்ந்த துறைகளில் ஒத்துழைப்பு மேற்கொள்ள இந்த ஒப்பந்தத்தின்படி முன்னுரிமை அளிக்கப்படும்.
- **தேன் பரிசோதனை ஆய்வகம் (Honey Testing Laboratory) : நாகலாந்து**
  - நாகாலாந்திம் திமாபூரில், தேன் பரிசோதனை ஆய்வகத்தை மத்திய வேளாண் அமைச்சர் என்எஸ் தோமர் திறந்து வைத்தார்.

# திருவிழா

- **இந்தியாவின் முதல் லாவெண்டர் திருவிழா**
  - மே 26 2022 அன்று ஜம்மு மற்றும் காஷ்மீர், பதேர்வாவில் இந்தியாவின் 'முதல் லாவெண்டர் திருவிழா'வை மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தொடங்கி வைத்தார்.
  - மத்திய அரசின் அரோமா மிஷன் 2ன் கீழ் 2 நாட்கள் லாவெண்டர் திருவிழா 2022 நடத்தப்படுகிறது.
  - நாட்டின் முதல் தேசிய உயர் உயர மருத்துவ நிறுவனமும் பதேர்வாவில் கட்டப்பட்டு வருகிறது.
- **பைகோ திருவிழா" (Baikho festival)**
  - வடகிழக்கு இந்தியாவின் நுழைவாயில் என்று அழைக்கப்படும் அசாம் மாநிலத்தில் பைகோ திருவிழா கொண்டாடப்படுகிறது. இது ஆண்டுதோறும் இந்தியாவின் ரபா (Rabha) பழங்குடியினரால் கொண்டாடப்படுகிறது.

# பொருளாதாரம்

- **ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்துக்கான ப்ரீமியம் தொகை அதிகரிப்பு**
  - பிரதமரின் விபத்து காப்பீட்டு திட்டம், பிரதமரின் ஆயுள் காப்பீட்டு திட்டம் ஆகியவற்றை பொருளாதார ரீதியில் கட்டுப்படியானதாக மாற்றுவதற்கு இவற்றின் பிரீமிய விகிதங்கள் திருத்தி அமைக்கப்படுகின்றன. இதன் படி பிரதமரின் விபத்து காப்பீட்டு திட்டத்தின் பிரீமியம் ரூ. 330 என்பதிலிருந்து ரூ.436 ஆகவும் பிரதமரின் ஆயுள் காப்பீட்டு திட்டத்தின் பிரீமியம் ரூ. 12 லிருந்து ரூ. 30 ஆகவும் மாற்றியமைக்கப்படுகின்றன.
  - 2015 ல் இருந்து இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. 31.03.2022 நிலவரப்படி அமல்படுத்தும் காப்பீட்டு நிறுவனங்கள் ரூ.9,737 பிரீமியம் காப்பீட்டு நிறுவனங்களுக்கு தொடர்ந்து இழப்புகள் ஏற்பட்டபோதும், கடந்த ஏழு ஆண்டுகளாக பிரீமியம் விகிதங்களில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. முதன் முறையாக 2022 ஜூன் 1 முதல் திருத்தியமைக்கப்படுகின்றன.
- **புதிய ரூபாய் நாணயங்களின் தொகுப்பை வெளியிட்டார் பிரதமர் மோடி**
  - இந்திய விடுதலையின் 75-வது ஆண்டு விழா முத்திரையுடன் புதிய ரூ 1, ரூ 2, ரூ 5, ரூ 10 மற்றும் ரூ 20 நாணயங்களை பிரதமர் வெளியிட்டார்.
  - குறிப்பாக பார்வை மாற்று திறனாளிகள் எளிதில் அடையாளம் கண்டுகொள்ளும் விதமாக புதிய நாணயங்களின் தொகுப்பை வெளியிட்டார்.
- **உலகலவில் தங்கம் மறுசுழற்சியில் இந்தியா 4-வது இடம்**
  - உலகம் முழுவதும் மறுசுழற்சி செய்யப்படும் மொத்த தங்கத்தில் இந்தியா 2001ஆம் ஆண்டில் 75 டன்கள் அல்லது 6.5% மறுசுழற்சி செய்து நான்காவது இடத்தை பிடித்துள்ளதாக உலக தங்க கவுன்சில் சமீபத்தில் வெளியிட்ட அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.


CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் தமிழகத்துக்கு நிதி ஒதுக்கீடு**
  - தேசிய சுகாதார இயக்கத்தின் கீழ் சுகாதாரத்துக்காக தமிழகத்துக்கு ரூ. 2,600 கோடி, பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் சுகாதார உட்கட்டமைப்பு இயக்கத்தின் கீழ் ரூ. 404 கோடி நிதியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது.
- **ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை திட்டம் : 36 - வது மாநிலமாக அசாம்**
  - ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை திட்டத்தை செயல்படுத்தும் 36-வது மாநிலமாக அசாம் உருவெடுத்துள்ளது. இதன்மூலம் நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் யூனியன் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதுடன், உணவு பாதுகாப்பை நாடு முழுவதும் மாற்றிக்கொள்ளும் வசதி ஏற்பட்டுள்ளது. இந்த ஒரே தேசம் ஒரே குடும்ப அட்டை திட்டமானது கடந்த ஆகஸ்ட் 2019-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
  - ஒரே நாடு ஒரு ரேஷன் கார்டு திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்தி 36வது மாநிலமாக அசாம். ONORC திட்டத்தின் அதிகபட்ச நன்மைகளைப் பெறுவதற்காக அரசாங்கம் 'MERA RATION' மொபைல் பயன்பாட்டையும் உருவாக்கியுள்ளது. அசாம் இறுதியாக ரேஷன் கார்டு பெயர்வுத்திறன் சேவையை செயல்படுத்தியுள்ளது.
- **2020-21-இல் வேலையின்மை விகிதம் 4.2 சதவீதமாக குறைவு**
  - 2020-21-ம் ஆண்டில் வேலையின்மை விகிதம் 4.2% ஆகக் குறைந்துள்ளதாக பிஎல்எப்எஸ் அமைப்பின் ஆய்வில் தெரியவந்துள்ளது. இது 2019-20-ல் 4.8% ஆக இருந்தது. கரோனா பாதிப்பு காரணமாக ஏற்பட்ட கதவடைப்பு உள்ளிட்ட காரணங்களால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதோடு பலர் வேலையிழந்தனர்.
  - தேசிய புள்ளியியல் அலுவலகத்தால் (NSO) தொடங்கப்பட்ட பிஎல்எப்எஸ் (Periodic Labour Force Survey) அமைப்பு, உடல் உழைப்பு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்கள் குறித்து ஆண்டுதோறும் ஆய்வு செய்து அறிக்கை வெளியிடுகிறது.
- **ஜன் சாமர்த் (Jan Samarth) இணையதளம்**
  - மத்திய அரசின் கடன் திட்டங்களால் பயன்பெறுவோருக்கு கல்வி, விவசாயம், வணிகம், வாழ்வாதாரம் என அனைத்துக்கும் ஒரே இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கும் வகையில் டெல்லியில் நிதியமைச்சக வளாகத்தில் பிரதமர் நரேந்திர மோடி ஜன் சாமர்த் (Jan Samarth) இணையதளத்தை தொடங்கிவைத்துள்ளார்.
  - இது மத்திய அரசின் கடன் திட்டங்களுக்கான (Credit Linked Government Schemes) இணையதளம் ஆகும்.
- **இந்தியாவிற்கு கச்சா எண்ணை ஏற்றுமதி ஈராக் முதலிடம்**
  - இந்தியாவிற்கு கச்சா எண்ணை ஏற்றுமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தை ஈராக்கும் . இரண்டாவது இடத்தை ரஷியாவும் மூன்றாம் இடத்தை சவுதி அரேபியாவும் பெற்றுள்ளன



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- இந்தியாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்வதில் ஈராக் முதல் இடத்திலும் சவுதி அரேபியா 2-வது இடத்திலும் ஐக்கிய அரபு அமீரகம் 3-வது இடத்திலும் இருந்து வந்தன. இந்நிலையில், மே மாதத்தில் இந்தியாவுக்கு தினமும் 8,19,000 பீப்பாய் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்து, 2-வது இடத்துக்கு ரஷ்யா முன்னேறியது குறிப்பிடத்தக்கது.

## உலக நிகழ்வுகள்

❖ **துருக்கி நாட்டின் பெயர் மாற்றம் : "துர்க்கியே"**

- சர்வதேச அளவில் துருக்கி நாட்டின் பெயரை "துர்க்கியே" என பெயர் மாற்றி அந்த நாட்டின் அதிபர் ரெசெப் தயிப் எர்டோகன் ஐநா பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸுக்கு அனுப்பிய கோரிக்கை கடிதத்தில், "'துருக்கி' மற்றும் 'துர்க்கி' போன்ற சொற்களுக்குப் பதிலாக 'துர்க்கியே' என்ற வார்த்தையைப் பயன்படுத்துவது குறித்து" கூறி இருந்தார்.
- அதன்படி துருக்கி என்ற பெயர் இனி "துர்க்கியே" என வழங்கப்படும் என ஐநா பொது செயலாளர் அன்டோனியோ குட்டரஸின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

❖ **BIMSTEC - 25 வது ஆண்டு விழா**

- டாக்காவில் உள்ள வங்காள விரிகுடாவின் பல துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான (பிம்ஸ்டெக்) செயலகம் பிம்ஸ்டெக் பிராந்திய அமைப்பின் 25-வது ஆண்டு விழா தினத்தைக் கொண்டாடியது.
- இது தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சர்வதேச அமைப்பாகும்.
- பங்களாதேஷ், பூடான், இந்தியா, மியான்மர், நேபாளம், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகியவை பிம்ஸ்டெக் அமைப்பில் உறுப்பினர்களாக உள்ளன.
- 1997-ம் ஆண்டு ஜூன் 6-இல் உருவாக்கப்பட்டது. அதன் தலைமையகம் பங்களாதேஷின் டாக்காவில் அமைந்துள்ளது.

❖ **ஃபிராண்டயர் (Frontier) கம்பியூட்டர்**

- அமெரிக்காவின் 'ஃபிரான்டியர்' (Frontier) கம்ப்யூட்டர் உலகின் சக்திவாய்ந்த சூப்பர் கம்ப்யூட்டராக மாறியுள்ளது, ஜப்பானின் 'ஃபுகாகு' (Fugaku) இரண்டாவது வேகமான கம்ப்யூட்டராகும்.

❖ **நாசாவின் "டாவின்சி மிஷன்" ("DAVINCI Mission")**

- நாசா டாவின்சி மிஷன் என்ற பணியை தொடங்க உள்ளது. டாவின்சி என்பது "ஆழ்ந்த வளிமண்டல வெள்ளி கோளின் உன்னத வாயுக்கள் பற்றிய ஆய்வு, வேதியியல் மற்றும் இமேஜிங் பணி" ("Deep Atmosphere Venus Investigation of Noble gases, Chemistry and Imaging Mission") என்பதாகும். இந்த பணியானது வீனஸ் மூலம் பறந்து 2029 இல் அதன் கடுமையான வளிமண்டலத்தை ஆராயும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **'ஆம்பர் விழிப்பூட்டல்கள்' (Amber Alerts)**
  - மெட்டா நிறுவனத்திற்கு சொந்தமான இன்ஸ்டாகிராம் மூலம் காணாமல் போன குழந்தைகளை கண்டறிய 'ஆம்பர் விழிப்பூட்டல்கள்' எனும் புதிய சேவை ஒன்றினை 25 நாடுகளில் தொடங்கியுள்ளது.
  - அமெரிக்காவில் உள்ள காணாமல் போன மற்றும் சுரண்டப்பட்ட குழந்தைகளுக்கான தேசிய மையம் (NCMEC) மற்றும் காணாமல் போன மற்றும் சுரண்டப்பட்ட குழந்தைகளுக்கான சர்வதேச மையம் போன்ற பல்வேறு நிறுவனங்களுடன் இணைந்து இன்ஸ்டாகிராமுக்கான ஆம்பர் விழிப்பூட்டல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
  - இந்த அம்சம் ஏற்கனவே பேஸ்புக்கில் உள்ளது, மேலும் இது 2015 இல் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து நூற்றுக்கணக்கான குழந்தைகளைக் கண்டறிய உதவியது என்று மெட்டா தெரிவித்துள்ளது.
- **இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் சேவை நிறுத்தம்**
  - உலகம் முழுவதும் உள்ள மக்களால் 27 ஆண்டுகளாக மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் இணையதள தேடுபொறியாக இன்டர்நெட் எக்ஸ்ப்ளோரர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 1995 ஆம் ஆண்டு மைக்ரோசாப்ட் நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய மென்பொருளான இதை நிறுத்த உள்ளதாக மைக்ரோசாப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

## சுற்றுச்சூழல்

- **நீர் மற்றும் சூரிய ஆற்றலினால் இயங்கும் - விமான நிலையம்**
  - இந்திரா காந்தி (தில்லி) சர்வதேச விமான நிலையம், 2030 ஆம் ஆண்டுக்குள் நிகர பூஜ்ஜிய கார்பன் உமிழ்வு (Net Zero Carbon Emission Airport) விமான நிலையமாக மாறுவதற்கான லட்சிய இலக்கை அடைவதற்கான முக்கிய படியாக, ஜூன் (2022) மாதத்திலிருந்து முற்றிலும் நீர் மற்றும் சூரிய சக்தியில் (Hydro and Solar Energy) இயங்கும் நாட்டின் முதல் விமான நிலையமாக மாறியுள்ளது.
- **இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய சக்தி திட்டம்-கேரளா**
  - டாடா பவர் சோலார் நிறுவனம் இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய சக்தி திட்டத்தை கேரளாவில் உள்ள காயங்குளத்தில் 350 ஏக்கர் நீர்நிலை, உப்பங்கழி பகுதியில் 101.6 மெகாவாட் சிகரத்தின் நிறுவப்பட்ட திறனுடன் தொடங்கியுள்ளது.

## அறிவியல் & தொழில்நுட்பம்

- **இந்திய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையம்**
  - அகமதாபாத்தில் உள்ள இந்திய தேசிய விண்வெளி ஊக்குவிப்பு மற்றும் அங்கீகார மையத்தின் (IN-SPACe) தலைமையகத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **ஹோமோசெப் (HomoSEP)-கழிவுநீர்த் தொட்டிகளை சுத்தம் செய்யும் ரோபோ**
  - இந்தியாவில் மனிதக் கழிவுகளை கைகளால் அகற்றும் முறையை ஒழிப்பதற்காக, சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் (ஐஐடி மெட்ராஸ்) ஆராய்ச்சியாளர்களால் 'ஹோமோசெப்' (HomoSEP) எனும் ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது.
- **நாட்டின் மிகப்பெரிய தனியார் விண்கல தயாரிப்பு மையம்**
  - ஹைதராபாத்தை சேர்ந்த ஆனந்த் டெக்னாலஜிஸ் என்ற விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் பெங்களூருவில் நாட்டிலே மிகப்பெரிய தனியார் விண்கல தயாரிப்பு மையத்தை பெங்களூருவில் திறக்கப்பட்டது.
- **ஜிசாட்-24 தகவல் தொடர்பு செயற்கைக்கோள்**
  - ஜூன் 22, 2022 அன்று தகவல் தொடர்பு சேவைக்கான ஜிசாட்-40 செயற்கைக்கோள் `தென் அமெரிக்காவின் பிரெஞ்ச் கயானாவில் உள்ள கொரு ஏவுதளத்தில் இருந்து கனரக ராக்கெட்டான ஏரியன்-5 மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.
  - 4,180 கிலோ எடை கொண்ட ஜிசாட்-24, இஸ்ரோவின் 42-வது தகவல் தொடர்பு செயற்கைக்கோளாகும். இத்துடன் சேர்த்து தகவல் தொழில்நுட்பத்துக்கான மலேசியாவின் மீசாட்-3 செயற்கைக்கோளும் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
  - முழுவதும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட டிடிஎச் தகவல் தொடர்பு செயற்கைக்கோளான ஜிசாட்-24 வெற்றிகரமாக செலுத்தப்பட்டது, என்எஸ்ஐஎல் வரலாற்றில் முக்கிய மைல் கல்லாகும்.
  - இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையமான இஸ்ரோவின் ஜிசாட்-40 செயற்கைக்கோள் தகவல் தொழில்நுட்ப சேவைக்காக நியூஸ்பேஸ் இந்தியா நிறுவனத்துக்காக (என்எஸ்ஐஎல்) உருவாக்கப்பட்டது. இது டிடிஎச் தேவைகளை பூர்த்தி செய்யும் 24-கேயூ பேண்ட் தகவல் தொழில்நுட்ப செயற்கை கோளாகும்.
- **பிஎஸ்எல்வி-C-53**
  - ஜூன் 30, 2022 அன்று மூன்று சிங்கப்பூர் செயற்கைக் கோள்களுடன் பிஎஸ்எல்வி-சி-53-ஐ இஸ்ரோ சதீஷ் தவான் விண்வெளி மையத்திலிருந்து வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
  - 365 கிலோகிராம் எடையுள்ள டிஎஸ்-இஓ செயற்கைக்கோளும், 155 கிலோகிராம் எடையுள்ள நியூசார் செயற்கைக்கோளும் சிங்கப்பூருக்காக கொரியா குடியரசால் உருவாக்கப்பட்டவை. 2.8 கிலோகிராம் எடையுள்ள ஸ்கூப் (SCOOB)-1 என்ற 3-வது செயற்கைக்கோள் சிங்கப்பூரில் உள்ள நான்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்டது.

## முக்கிய நபர்கள் & நியமனங்கள்

- **ஐ.நா. குழந்தைகள் நிதியத்தின் நல்லெண்ண தூதுவராக சச்சின் நியமனம்**
  - சச்சின் டெண்டுல்கர் ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியத்தின் (UNICEF) 'நல்லெண்ணத் தூதராக' 20-வது ஆண்டாகத் தொடர்ந்து நியமிக்கப்பட்டுள்ளார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **இந்தியாவின் விடுதலை போராளி அஞ்சலை பொன்னுசாமி காலமானார்**
  - மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் பிறந்த அஞ்சலை பொன்னுசாமி அம்மாள் 1943-ஆம் ஆண்டு இரண்டாம் உலகப் போரின்போது நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் இந்திய தேசிய இராணுவத்தில் (I.N.A) ஜான்சி ராணி படைப்பிரிவில் இணைந்து இந்தியாவின் விடுதலைக்காகப் போராடினார்.
  - வீரமங்கையான அஞ்சலை பொன்னுசாமி அம்மாள் (102 வயது) மலேசியாவின் செந்துல் நகரில் காலமானார்.
- **ஐ.நா.வுக்கான இந்தியாவின் (முதல் பெண்) பிரதிநிதி ருச்சிரா கம்போஜ்**
  - ஐ.நா.வுக்கான இந்தியாவின் (முதல் பெண்) நிரந்தர பிரதிநிதியாக முதல் முறையாக ருச்சிரா கம்போஜ் என்ற பெண் அதிகாரி பொறுப்பேற்றுள்ளார்.
- **இந்திய பிரஸ் கவுன்சிலின் முதல் பெண் தலைவர்**
  - இந்திய பிரஸ் கவுன்சிலின் புதிய தலைவராக ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ரஞ்சனா பிரகாஷ் தேசாய் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவர் பிரஸ் கவுன்சிலின் முதல் பெண் தலைவர் ஆவார்.
- **நிதி ஆயோக்கின் CEO-ஆக பரமேஸ்வரன் நியமனம்**
  - "நிதி ஆயோக்" (NITI Aayog) அமைப்பின் புதிய தலைமை செயல் அதிகாரியாக (3-வது) பரமேஸ்வரன் ஐயர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - முதலாவது CEO - சிந்துஸ்ரீ குல்லார், இரண்டாவது CEO - அமிதாப் காந்த்
- **India-UK கலாச்சார அமைப்பின் தூதராக ஏஆர் ரஹ்மான் நியமனம்**
  - இந்தியாவின் 75வது சுதந்திர தினத்தைக் குறிக்கும் கலாச்சாரத்தின் பருவம் (The Season of Culture) தூதராக இசையமைப்பாளர் ஏஆர் ரஹ்மான் நியமிக்கப்பட்டுள்ளார். இது இந்தியாவிற்கான பிரிட்டனின் துணை உயர் ஆணையர் ஜான் தாம்சன் மற்றும் பிரிட்டிஷ் கவுன்சிலின் இயக்குனர் (இந்தியா) பார்பரா விக்ஹாம் ஆகியோரால் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டது.
  - கலாச்சார பருவம், கலை, ஆங்கிலம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் இந்தியா-இங்கிலாந்து ஒத்துழைப்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- **மத்திய புலனாய்வு அமைப்பின் இயக்குநர் - தாபன் தேகா**
  - உளவுத்துறையின் இயக்குநராக மூத்த ஐபிஎஸ் அதிகாரி தபன் குமார் தேகாவை (Tapan Kumar Deka) மத்திய அரசு நியமித்துள்ளது.
- **என்.ஐ.ஏ. அமைப்பின் இயக்குனராக தின்கர் குப்தா நியமனம்**
  - தேசிய புலனாய்வு முகமையின் (என்.ஐ.ஏ.) இயக்குனர் ஜெனரலாக தின்கர் குப்தா ஐ.பி.எஸ் மத்திய அரசால் நியமிக்கப்பட்டு உள்ளார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# திட்டம்

- **'ஷ்ரேஷ்டா' (SHRESHTA) திட்டம்**
  - 'ஸ்ரேஷ்டா' எனும் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கான குடியிருப்புக் கல்வி திட்டம் (Scheme for Residential Education for Students in Targeted Areas-SHRESHTA), அரசியலமைப்புச் சட்டப்படி, ஏழை மாணவர்களுக்கும் தரமான கல்வி மற்றும் வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டது.
  - ஷ்ரேஷ்டா என்பது, பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2.5 லட்சத்துக்குள் உள்ள பட்டியலின சமூகத்தை சேர்ந்த திறமையான ஏழை மாணவர்களுக்கு தரமான கல்வியை தருவதற்காக உருவாக்கப்பட்டது.
  - இதன்கீழ், ஆண்டுதோறும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் உள்ள குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பட்டியலின மாணவர்கள் தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும் தேசிய நுழைவுத் தேர்வின் வெளிப்படையான வழிமுறை மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இவர்கள் சிபிஎஸ்இ பாடத் திட்டத்துடன் கூடிய சிறந்த தனியார் பள்ளிகளில், 9 முதல் 12-ம் வகுப்பு வரை படிப்பதற்காக சேர்க்கப்படுகிறார்கள்.
  - அதன் பிறகு, இந்திய அரசின் நிதியுதவியுடன் தங்கள் உயர் கல்வியை தொடர்வதற்காக, போஸ்ட் மெட்ரிக் ஸ்காலர்ஷிப் திட்டம் அல்லது உயர் வகுப்பு கல்வித் திட்டத்துடன் மாணவர்கள் இணைக்கப்படுவர்.
  - அதன்படி, 9-ம் வகுப்பு மாணவர்களுக்கு ஆண்டுக்கு 1 லட்சமும், 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு 1 லட்சத்து 10 ஆயிரம் ரூபாயும், 11-ம் வகுப்பு மாணவர்களுக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.
  - இந்த உதவித்தொகை ஒவ்வொரு நிதியாண்டின் முதல் காலாண்டில், பள்ளிகளுக்கு நேரடியாக ஒரே தவணை முறையில் வழங்கப்படும். மாணவர்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் அமைச்சகத்தால் கண்காணிக்கப்படும்.
- **இ சஞ்சீவனி திட்டம்- ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் (எண்ம) திட்டம் இணைப்பு**
  - இ- சஞ்சீவனி திட்டத்தை, ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் (எண்ம) திட்டத்துடன் ஒருங்கிணைத்துள்ளதாக தேசிய சுகாதார ஆணையம் அறிவித்துள்ளது. இந்த ஒருங்கிணைப்பு, மத்திய சுகாதார அமைச்சகத்தின் தொலை மருத்துவ சேவையான இ-சஞ்சீவனியை தற்போது பயன்படுத்தி வருவோர், ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கை எளிதில் உருவாக்கி அதனை பயன்படுத்தவும், ஏற்கனவே பெறப்பட்ட சிகிச்சைக்கான பரிந்துரைகள், பரிசோதனை விவரங்களை தொடர்ந்து பராமரிக்க வகை செய்கிறது.
  - பயனாளர்கள் தங்களது சுகாதார ஆவணங்களை இ- சஞ்சீவனி திட்ட மருத்துவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடிவதால், மருத்துவ ஆலோசனைகள் மற்றும் தொடர் சிகிச்சை கிடைப்பதையும் உறுதி செய்கிறது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை லைஃப் இயக்கம்**
  - ஜூன் 5, 2022 அன்று 'சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கை முறை - லைஃப் இயக்கம்' எனப்படும் உலகளாவிய கருத்தரங்கை பிரதமர் திரு.நரேந்திர மோடி காணொலி காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.
  - நிகழ்ச்சியில் உரையாற்றிய பிரதமர், உலகம் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சமாளிக்க, மனிதனின் கூட்டு முயற்சிகள் மற்றும் வலுவான நடவடிக்கைகளைக் கொண்டு, உலகம் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை சமாளித்து நிலையான வளர்ச்சியை அடைய வேண்டியது காலத்தின் கட்டாயம் என்று பிரதமர் கூறினார்.
  - உலகளாவிய இந்த கூட்டு முயற்சி, 2021-ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் தன்னால் முன்மொழியப்பட்டதை பிரதமர் நினைவுகூர்ந்தார். காலத்துக்கு ஏற்ப உலகத்துடன் ஒத்துப் போகும், தீமை விளைவிக்காத வாழ்க்கை முறையை வாழ்வது என்பதே லைஃப் இயக்கத்தின் நோக்கம் என்றும், அத்தகைய வாழ்க்கை முறையை பின்பற்றுபவர்கள் “ப்ரோ-பிளானட் பீப்புள்” (“Pro-Planet People”) என்று அழைக்கப்படுவதாகவும் பிரதமர் கூறினார்.
  - லைஃப் இயக்கம், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு, கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நிகழ்காலத்துக்காக செயல்படுகிறது. குறைவாக பயன்படுத்துவது, மீண்டும் பயன்படுத்துவது, மற்றும் மறுசுழற்சி என்பது நம் வாழ்க்கையுடன் கலந்துள்ள ஒன்று என்று பிரதமர் தெரிவித்தார்.
- **‘நிபுன்’ திட்டம் - கட்டுமானத் தொழிலாளர்களின் திறன் பயிற்சி**
  - நிபுன் திட்டமானது (National Initiative for Promoting Upskilling of Nirman workers - NIPUN) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் தீன்தயாள் அந்த்யோதயா யோஜனா-தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (DAY-NULM) திட்டத்தின் கீழ் 1 லட்சத்திற்கும் அதிகமான கட்டுமானத் தொழிலாளர்களுக்கு புதிய திறன் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் பயிற்சியளிக்கும் முயற்சியாகும். மேலும் வெளிநாடுகளிலும் அவர்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- **அக்னிபத் (‘AGNIPATH’) திட்டம்**
  - ராணுவம், கடற்படை,விமானப்படை ஆகியவற்றில் 17.5 வயதில் இருந்து 21 வயதுக்குள் உள்ள இளைஞர்களை தற்காலிகமாக (நான்கு ஆண்டுகளுக்கு மட்டும்) பணி நியமனம் செய்வதே இந்த அக்னிபத் திட்டம். பணிக்காலம் முடிந்ததும், அவர்களுக்கு சேவை நிதி தொகுப்பு வழங்கப்படும்.
  - மேலும், கொரோனா பாதிப்பு காரணமாக, கடந்த 2 ஆண்டுகளாக ராணுவ ஆள்தேர்வு நடக்கவில்லை. அதனால், ராணுவத்தில் சேருவதற்கு ஏராளமான இளைஞர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. இதை மனதில் கொண்டு, பிரதமர் மோடி உத்தரவின்பேரில், அக்னிபத்



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

திட்டத்தில் சேருவதற்கான வயது வரம்பை மத்திய அரசு 21-ல் இருந்து 23 ஆக உயர்த்தி உள்ளது.

- நடப்பு நிதியாண்டுக்கான (2022-23) பட்ஜெட்டில் ராணுவத்துக்கு ரூ.5,25,166 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில், ஓய்வூதியத்துக்காக மட்டும் ரூ.1,19,696 லட்சம் கோடியை ராணுவம் செலவழிக்கிறது. அதாவது, நான்கில் ஒரு பகுதி ஓய்வூதியத்துக்காக செலவிடப்படுகிறது. ராணுவ வீரர்களின் ஊதியம் மற்றும் பராமரிப்புச் செலவுக்காக ரூ.2,33,000 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இதர தொகையை கொண்டே தளவாடங்கள் வாங்குவது உள்ளிட்ட ராணுவத்துக்கான பிற செலவுகள் செய்யப்படுகிறது. எனவே, ராணுவத்தில் தேவையில்லாத செலவைக் குறைக்க மத்திய பாதுகாப்புத்துறை பல்வேறு கட்ட ஆலோசனைகளைச் செய்துவந்தது. அதனடிப்படையில், அக்னிபத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- மேலும், இவர்களில் தேவைக்கேற்ப, 25 சதவீதத்தினர் மட்டும் நிரந்தரப் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்
- ஆயுதப்படைகளில் இந்திய இளைஞர்களை பணியமர்த்தும் திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. அக்னிபத் என்று அழைக்கப்படும் இந்தத் திட்டத்தின்கீழ் பணிக்கு தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர்கள் அக்னி வீரர்கள் என்று அழைக்கப்படுவார்கள். தேசபக்தியுடன், துடிப்புமிக்க இளைஞர்கள் ராணுவத்தில் நான்கு ஆண்டு காலத்திற்கு பணியாற்ற அக்னிபத் அனுமதிக்கும்.
- ஆயுதப்படைகளில் இளைஞர்களை பணியமர்த்துவதற்காக இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்திலிருந்து சமகால தொழில்நுட்ப போக்குகளுக்கு ஏற்ற வகையில் திறமை மிக்க இளைஞர்களை சீருடைப் பணிக்கு ஈர்க்க இது வாய்ப்புகளை வழங்கும். இளைஞர்களை படைகளில் சேர்ப்பதன் மூலம் வீரர்களின் சராசரி வயதை நான்கைந்து ஆண்டுகள் குறைக்க இது வகைசெய்யும்.
- அரசு அறிமுகப்படுத்தியுள்ள மிகப்பெரிய பாதுகாப்புக் கொள்கை சீர்திருத்தமான இது, முப்படைகளிலும் மனிதவளக் கொள்கையை நடைமுறைப்படுத்தும் புதிய அத்தியாயத்தை உருவாக்கும். உடனடியாக அமலுக்கு வரும் இந்தக் கொள்கை முப்படைகளிலும் ஆள்சேர்ப்பை நிர்வகிக்கும்.
- இந்தத் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்படும் அக்னி வீரர்களுக்கு, அபாயம் மற்றும் சிரமப்படிகளுடன் ஈர்க்கும் வகையிலான மாதாந்திர ஊதியம் முப்படைகளிலும் வழங்கப்படும். 4 ஆண்டு பணிக்காலம் முடிவடைந்ததும், அக்னி வீரர்களுக்கு சேவா நிதி என்ற ஒரே தடவையிலான தொகுப்பு வழங்கப்படும். அதில் அவர்களது பங்களிப்பு மற்றும் வட்டி ஆகியவை அடங்கும்.
- முதலாம் ஆண்டில் மாதாந்திர ஊதியமாக ரூ,30,000 நிர்ணயிக்கப்படும். அக்னி வீரர் தொகுப்பு நிதிக்கு ரூ.9,000 அளிக்கப்படும். எஞ்சிய ரூ.21,000 கையில் கிடைக்கும். 2-ம்



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

ஆண்டில் ரூ.33,000, 3-ம் ஆண்டில் ரூ.36,500, 4-ம் ஆண்டில் ரூ.40,000 ஆக ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 30% பங்களிப்புத் தொகையாகப் பிடிக்கப்படும். எஞ்சிய 70% தொகை வழங்கப்படும்.

- 4 ஆண்டுகளுக்குப் பின்னர் தொகுப்பு நிதியில் செலுத்தப்பட்ட ரூ.5.02 லட்சம் மற்றும் அரசு அளிக்கும் அதே தொகை சேர்த்து வட்டியுடன் சேவா நிதியாக ரூ.11.71 லட்சம் வீரர்களுக்கு வழங்கப்படும். இந்த சேவா நிதிக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படும். இதைத்தவிர பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய பயன்கள் அளிக்கப்பட மாட்டாது. அக்னி வீரர்களுக்கு பங்களிப்பு அல்லாத ஆயுள் காப்பீடு ரூ.48 லட்சத்துக்கு வழங்கப்படும்.
- அக்னிபத் திட்டத்தின்கீழ், 4 ஆண்டு காலத்திற்கு வீரர்கள் பணியமர்த்தப்படுவார்கள் இந்த ஆண்டு 46,000 பேர் பணியில் சேர்க்கப்படுவார்கள். இதற்கான வயது வரம்பு 17.5 வயது முதல் 21 வயதாகும். தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் மருத்துவ தகுதி பெற்றிருக்க வேண்டும்.

## மாநாடுகள்

### ❖ அனைத்து மாநில கல்வி அமைச்சர்கள் மாநாடு - குஜராத்

- புதிய கல்விக்கொள்கை குறித்து விவாதிக்க குஜராத்தில் அனைத்து மாநில கல்வி அமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு அரசு இந்த மாநாட்டை புறக்கணித்தது.

### ❖ சைமா டெக்ஸ்பேர் 2022 - கோயம்புத்தூர்

- தென்னிந்திய பஞ்சாலைகள் சங்கம் (சைமா) சார்பில் ஒவ்வொரு ஆண்டும் ஜவுளி இயந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்களின் கண்காட்சியை நடத்தி வருகிறது. அதன்படி, இந்தாண்டுக்கான 13-வது டெக்ஸ்பேர் கண்காட்சி கோயம்புத்தூரில் உள்ள கொடிசியா நிரந்தர கண்காட்சி வளாகத்தில் நடைபெற்றது.

### ❖ முதலாவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாடு

- ஜூன் 16, 17 ஆகிய தேதிகளில் இமாச்சலப் பிரதேசம், தர்மசாலாவில் நடைபெற்ற முதலாவது தேசிய தலைமைச் செயலாளர்கள் மாநாட்டுக்கு பிரதமர் தலைமை வகித்தார்.
- மத்திய மாநில அரசுகளுக்கு இடையிலான கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு மாநாடு நடைபெற்றது.
- மேலும், 2047-க்கான ‘விடுதலையின் அமிர்தப் பெருவிழா’ வழிகாட்டுதல் திட்டம் குறித்த சிறப்பு அமர்வு நடைபெற்றது.
- **கருப்பொருள்:**
  1. தேசிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது
  2. நகர்ப்புற நிர்வாகம்
  3. பயிர் மாற்றம் மற்றும் எண்ணெய் வித்துக்கள், பருப்பு வகை மற்றும் இதர வேளாண் பொருட்களில் தன்னிறைவை அடைதல்.

### ❖ உலக வர்த்தக அமைப்பின் 12வது அமைச்சர்கள் அளவிலான மாநாடு

- உலக வர்த்தக அமைப்பின் 12-வது அமைச்சர்கள் அளவிலான மாநாடு ஜெனிவாவில் நடைபெற்றது. இதில் மத்திய அமைச்சர் பியூஸ் கோயல் கலந்து கொண்டார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- மாநாட்டின் மையப்புள்ளியாக இந்தியா திகழ்ந்தது 135 கோடி இந்தியர்களுக்கும் பெருமை அளிக்கும் விஷயமாகும் என்று அவர் கூறினார்.

❖ **பிரிக்ஸ் நாடுகளின் விவசாய அமைச்சர்களின் 12-வது கூட்டம்**

- பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் விவசாயத்துறை அமைச்சர்கள் கலந்து கொண்ட 12-வது கூட்டம் காணொலி வாயிலாக நடைபெற்றது. இதில் சீனா, தென்ஆப்பிரிக்கா, பிரேசில், ரஷ்யா, இந்தியா ஆகிய நாடுகளின் விவசாயத்துறை அமைச்சர்கள் பங்கேற்றனர்.
- நிகழ்ச்சியில், விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை இணையமைச்சர் திருமதி.ஷோபா கரந்த்லாஜே கலந்து கொண்டார். அப்போது, விவசாயத்துறை மேம்பாடு, விவசாயிகளின் நலனுக்காக இந்திய அரசு மேற்கொண்டுள்ள பிஎம் கிசான், பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம், பீமா யோஜனா உள்ளிட்ட நடவடிக்கைகள் மற்றும் முயற்சிகளை சுட்டிக்காட்டினார்.

❖ **ஐ நா கடல்சார் மாநாடு**

- ஜூன் 29, 2002 அன்று போர்ச்சுக்கல் தலைநகர் லிஸ்பனில் நடைபெற்ற ஐநா கடல்சார் மாநாட்டில் மத்திய புவி அறிவியல்துறை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், நார்வே நாட்டின் பருவநிலை மற்றும் சுற்றுச்சூழல்துறை அமைச்சர் திரு எஸ்பென் பார்த் எய்டுடன் பரஸ்பரம் இருதரப்பு பல்வேறு விவகாரம் குறித்து விவாதித்தார்.
- மேலும், கடந்த வாரம் புதுதில்லியில் நீலப்பொருளாதாரம் தொடர்பாக இந்தியாவுக்கான நார்வே தூதர் திரு ஹான்ஸ் ஜேக்கப் ஃபிரைடன் லுன்ட், மத்திய புவி அறிவியல்துறை செயலாளர் டாக்டர் எம் ரவிச்சந்திரன் இடையே 5-வது இந்தியா-நார்வே சிறப்பு நடவடிக்கை குழு கூட்டம் நடைபெற்ற நிலையில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.
- புதிய திட்டங்கள் மற்றும் கடல்சார் தொழிற்சாலைகளை இணைத்தலுக்கான வழிவகைகளுக்கு சிறப்பு நடவடிக்கைகள் குழு ஒப்புகொண்டது. பசுமை கடல்சார், நீடித்த கடல்சார் மேலாண்மை, ஆழ்கடல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் மேலும் ஒத்துழைப்பை கண்டறிவதற்கும் இருநாடுகளும் ஒப்புகொண்டுள்ளன.

❖ **14-வது பிரிக்ஸ் உச்சிமாநாடு (BRICS Summit)**

- சீனா தலைமையில் பீஜிங்கில் நடைபெற்ற நடத்திய 14வது பிரிக்ஸ் மாநாட்டில் வீடியோ கான்பரன்ஸ் வாயிலாக கலந்து இந்தியப் பிரதமர் கலந்து கொண்டார்.
- பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 நாடுகள் இணைந்து பிரிக்ஸ் அமைப்பை உருவாக்கியுள்ளன.



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

# பாதுகாப்பு

- **ரூ.2,971 கோடியில் அஸ்திரா எம்கே-1 ஏவுகணைகளைக் கொள்முதல்**
  - ராணுவத் தளவாட உற்பத்தியில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக பாரத் டைனமிக்ஸ் நிறுவனத்துடன் ரூ.2,971 கோடியில் அஸ்திரா எம்கே-1 (Astra Mk-1) ஏவுகணைகளைக் கொள்முதல் செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சகம் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது.
- **உள்நாட்டில் ரூ. 76,390 கோடியில் பாதுகாப்புத் தளவாடங்கள் கொள்முதல்**
  - ஜுன் 6, 2022 அன்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில், பாதுகாப்புத் தளவாடக் கொள்முதல் கவுன்சிலின் கூட்டம் நடைபெற்றது.
  - இதில் "தற்சார்பு இந்தியா திட்டத்தின்" கீழ், ரூ.76,390 கோடி ரூபாய் மதிப்பிலான பாதுகாப்புத் தளவாட கொள்முதலுக்கான பரிந்துரைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது இந்தியாவின் பாதுகாப்புத் தொழிலுக்கு ஊக்கமளிப்பதுடன், வெளிநாட்டுச் செலவுகளை கணிசமாகக் குறைக்கவும் உதவும்.
  - மேலும், இந்தியக் கடற்படைக்கு, அடுத்த தலைமுறைக்கான ஆயுதங்கள் உள்ளிட்டவற்றை வாங்குவதற்கு ரூ.36,000 கோடி மதிப்பிலான பரிந்துரைகளுக்கும் ஒப்புதல் வழங்கப்பட்டது.
- **ஹிமாச்சல பிரதேச ட்ரோன் கொள்கை - 2022**
  - ஆளில்லா (ட்ரோன்) விமானங்களுக்கான கொள்கைக்கு ஒப்புதல் அளித்த முதல் இந்திய மாநிலமாக இமாச்சலப் பிரதேசம் உருவாக்கியுள்ளது
  - மலை மாநிலத்தின் பல்வேறு பொது சேவைகளுக்கு ட்ரோன்கள் மற்றும் ஒத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை செயல்படுத்த முயல்கிறது. 'ஹிமாச்சல பிரதேச ட்ரோன் கொள்கை 2022 'க்கு முதல்வர் ஜெய்ராம் தாக்கூர் ஒப்புதல் அளித்துள்ளார்.
- **ஐஎன்எஸ் நிஷாங்க் மற்றும் ஐஎன்எஸ் அக்ஷய் விடைபெற்றன**
  - ஜுன் 3, 2022 அன்று இந்திய கடற்படையில் ஆபரேஷன் தல்வார் மற்றும் ஆபரேஷன் பராக்ரம் (Operation Talwar and Operation Parakram) உள்ளிட்ட 32 ஆண்டுகால சேவையில் ஈடுபட்ட இரண்டு கப்பல்களான ஐஎன்எஸ் அக்ஷய் மற்றும் ஐஎன்எஸ் நிஷாங்க் ஆகியவை விடைபெற்றன.
- **அணுசக்தி திறன் கொண்ட அக்னி - 4 ஏவுகணை சோதனை வெற்றி**
  - அணு ஆயுதங்களுடன் கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் அணுசக்தி திறன் கொண்ட அக்னி-4 ஏவுகணை வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. ஒடிசாவின் அப்துல் கலாம் தீவில் இருந்து ஏவப்பட்ட அக்னி-4 ஏவுகணை துல்லியமாக இலக்கைத் தாக்கியது.
- **தானியங்கி பறக்கும் பிரிவு தொழில்நுட்ப செயல்விளக்க விமானம்**
  - தானியங்கி பறக்கும் பிரிவு தொழில்நுட்ப செயல்விளக்க விமானத்தை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (DRDO) கர்நாடகாவின் சித்ரதுர்காவில் உள்ள வான்சோதனை தளத்தில் முதல்முறையாக வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **"பத்மா" - இந்திய கடலோர காவல்படை ஊதியப் பட்டியல்**
  - ஜூன் 28, 2022 அன்று இந்திய கடலோர காவல்படைக்கான தானியங்கு ஊதியம் மற்றும் கொடுப்பனவு தொகுதியான மாதாந்திர கொடுப்பனவுகளை (ஊதியப் பட்டியல்) வழங்குவதற்கான பேரோல் ஆட்டோமேஷன் (PADMA - Payroll Automation for Disbursement of Monthly Allowances) எனும் பிரத்தியேக மென்பொருளை இந்திய கடலோர காவல் படை (Indian Coast Guard) உருவாக்கியுள்ளது.
- **இந்திய கடற்படை வீரர்கள் வணிக கப்பலில் பணிபுரிவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்**
  - ஜூன் 20, 2022 அன்று இந்திய கடற்படை வீரர்கள் வணிக கப்பலில் பணிபுரிவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், கப்பல் போக்குவரத்துத் துறை தலைமை இயக்குனர் மற்றும் இந்திய கடற்படையிடையே கையெழுத்தாகியுள்ளது
  - ஓய்வு பெற்ற இந்திய கடற்படை வீரர்கள், வணிக கப்பல்களில் பணியாற்றுவதற்கான தகுதி சான்றிதழ்களை பெற்று, கடல் வாணிபத் துறையில் பணிபுரிய சுமூகமாக மாற்றுவதற்கு இந்த திட்டங்கள் வகை செய்கிறது.
- **அப்யாஸ் (ABHYAS)**
  - ஜூன் 29, 2022 அன்று உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட 'அப்யாஸ்' அதிவேகமாக வான்வழி இலக்கு வாகனம் (High speed Expendable Aerial Target) ஒடிஸா கடற்கரையில் உள்ள சந்திப்பூர் ஒருங்கிணைந்த சோதனை மையத்திலிருந்து ஏவப்பட்டு வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டது.
  - பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டிஆர்டிஓ) ஏரோநாட்டிகல் மேம்மபட்டு நிறுவனத்தால் அபியாஸ் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது.

## கூட்டுப்பயிற்சி

| பெயர் | நாடுகள் | பயிற்சி வகை | இடம் |
|---|---|---|---|
| “சம்ப்ரிதி எக்ஸ்" (“EX SAMPRITI-X”) - 2022 | இந்தியா மற்றும் வங்கதேசம் | ராணுவப் பயிற்சி | ஜெஸ்ஸோர் (வங்கதேசம்) |
| "எக்ஸ் கான் குவெஸ்ட் ("EX KHAAN QUEST”) – 2022 | பன்னாட்டு அமைதி காக்கும் பயிற்சி (16 நாடுகள்) | ராணுவப் பயிற்சி | மங்கோலியா (உலான்பாதர்) |

## விருதுகள்

- **யோகாவை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப்படுத்தும் பிரதமர் விருது-2021**
  - 2021-ல் யோகாவை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப்படுத்துவதற்கு தலைசிறந்த பங்களிப்புக்கான பிரதமரின் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இது யோகா துறையில் மிகுந்த கௌரவத்துக்குரிய விருதாகும்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- தனிநபர்கள் பிரிவில் லே, லடாக் பகுதியைச் சேர்ந்த திரு பிக்கு சங்சேனாவும், பிரேசிலின் சாவோ பாலோவை சேர்ந்த திரு மார்க்கஸ் வினிசியஸ் ரோஜோ ரோட்ரிக்ஸ்சும் விருதுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.
- அமைப்புகள் பிரிவில் உத்தராகண்டில் உள்ள ரிஷிகேஷின் டிவைன் லைப் சொசைட்டியும், பிரிட்டனின் பிரிட்டிஷ் வீல் ஆப் யோகாவும் இந்த விருதுகளை பெறுகின்றன.
- 2021-ல் யோகாவை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப்படுத்துவதற்கு தலைசிறந்த பங்களிப்புக்கான விருதுகளை 2016 ஜூன் 21-ல் சண்டிகரில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச யோகா தின நிகழ்வில் பிரதமர் அறிவித்தார். இந்த விருதுகளுக்கான விதிமுறைகள் மத்திய ஆயுஷ் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டன.

❖ **பள்ளிக் கல்வியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் - யுனெஸ்கோ விருது**

- பிரதமரின் இ-வித்யா' திட்டத்தின் கீழ் பள்ளிக் கல்வியில் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தியதற்காக தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சிலின் அங்கமான மத்திய கல்வித் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு யுனெஸ்கோவின் கிங் ஹமத் பின் இசா அல்-கலீஃபா விருது வழங்கப்பட்டுள்ளது.
- 2020-ஆம் ஆண்டு மத்திய கல்வி அமைச்சகத்தால் தற்சார்பு இந்தியா திட்டத்தின் பகுதியாக பிரதமரின் இ-வித்யா திட்டம் தொடங்கப்பட்டது. இது தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கல்வி புகட்ட டிஜிட்டல் இணையவழி முறை சார்ந்த அனைத்து முயற்சிகளையும் ஒருங்கிணைக்கிறது. இதன் மூலம் கற்றல் இழப்பை குறைப்பதே நோக்கம் ஆகும்.

❖ **இளவரசர் சுல்தான் பின் அப்துல் அஜிஸ் "சர்வதேச தண்ணீர் விருது"**

- சென்னை ஐஐடி வேதியியல் துறை பேராசிரியர் டி. பிரதீப் மற்றும் அவரது ஆராய்ச்சிக் குழுவுக்கு இளவரசர் சுல்தான் பின் அப்துல் அஜிஸ் "சர்வதேச தண்ணீர் விருது'' அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விருது சவூதி அரேபியாவின் இளவரசர் சுல்தான் பின் அப்துல் அஜிஸ் அவர்கள் பெயரில் ஆண்டுக்கு இரண்டு முறை வழங்கப்படுகிறது.

## விளையாட்டு நிகழ்வுகள்

❖ **ஆசிய கோப்பை ஹாக்கி 2022 : இந்தியாவுக்கு வெண்கல பதக்கம்**

- இந்தோனேசியாவின் ஜகார்தாவில் நடைபெற்ற 11-வது ஆசிய கோப்பை ஆடவர் ஹாக்கி போட்டியில் இந்தியா வெண்கல பதக்கம் வென்றது.
- தென் கொரியா சாம்பியன் பட்டம் (தங்கம்) வென்றது.
- மலேசியாயா வெள்ளி பதக்கம் வென்றது.

❖ **மிதாலி ராஜ் ஓய்வு**

- இந்திய பெண்கள் கிரிக்கெட் அணியின் கேப்டன் மிதாலி ராஜ் அனைத்து வகையிலான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **டி20 போட்டியில் 15 வருடங்களைப் பூர்த்தி செய்த முதல் இந்திய வீரர்**
  - தமிழகத்தைச் சேர்ந்த தினேஷ் கார்த்திக், சர்வதேச டி20 கிரிக்கெட்டில் 15 வருடங்களைப் பூர்த்தி செய்த முதல் இந்திய வீரர் என்கிற பெருமையைப் பெற்றுள்ளார்.
- **ரஞ்சி கோப்பை கிரிக்கெட் பாட்டி 2022 : மத்திய பிரதேசம் சாம்பியன்**
  - 87 ஆண்டுகால வரலாற்றில், 41 முறை சாம்பியன் வென்ற மும்பை அணியை வென்று ரஞ்சி கோப்பையை மத்திய பிரதேச அணி முதல் முறையாக சாம்பியன் ஆனது.
  - போட்டியின் தொடர் நாயகன் விருதினை மும்பை அணி வீரர் சர்ஃபராஸ் கான் பெற்றுள்ளார்.
- **பிரெஞ்சு ஓபன்- மகளிர் ஒற்றையர் பிரிவில் இகா ஸ்வியாடெக் சாம்பியன்**
  - பாரிஸில் நடைபெற்ற பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவு சாம்பியன் பட்டத்தை 21 வயதான போலாந்து வீராங்கனை இகா ஸ்வியாடெக் வென்றார்.
  - இதன் மூலம் இகா ஸ்வியாடெக் 2வது முறையாக பிரெஞ்ச் ஓபன் பட்டத்தை வென்றார்.
- **பிரெஞ்சு ஓபன் கோப்பை 14-வது முறையாக ரஃபேல் நடால் வெற்றி**
  - பாரிஸில் நடைபெற்ற பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் ரஃபேல் நடால் சாம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் பிரெஞ்ச் ஓபன் கோப்பையை 14-வது முறையாக ரஃபேல் நடால் வென்றுள்ளார். அதேசமயம் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் நடால் வெல்லும் 22-வது பட்டம் இதுவாகும்.
- **61-வது தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி: தமிழக வீராங்கனை தங்கம்**
  - 61-ஆவது மாநிலங்களுக்கு இடையிலான தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் மகளிர் 100 மீ. தடை தாண்டுதலில் தமிழகத்தின் கனிமொழி தங்கம் வென்றார்.
- **செஸ் ஒலிம்பியாட் போட்டி ஜோதி ஓட்டம் பிரதமர் தொடங்கி வைத்தார்**
  - ஜூன் 19, 2022 அன்று சர்வதேச செஸ் கூட்டமைப்பின் தலைவர் டிவோர்கோவிச் 44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான ஜோதியை பிரதமர் மோடியிடம் முறைப்படி ஒப்படைத்தார். இதை தொடர்ந்து, இந்திய செஸ் சாம்பவனான விஸ்வநாதன் ஆனந்திடம் கொடுத்து, ஜோதி ஓட்டத்தை பிரதமர் தொடங்கி வைத்தார்.

## புள்ளிவிவரம்

- **புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறன் தயாரிப்பு - இந்தியா 3-வது இடம்**
  - 2022 உலகளாவிய நிலை அறிக்கையின் (Renewables 2022 Global Status Report) படி, 2021 ஆம் ஆண்டில் மொத்த புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சேர்க்கையில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
  - முதலிடத்தை சீனாவும் (136 GW) இரண்டாவது இடத்தை அமெரிக்காவும் (43 GW) மூன்றாவது இடத்தை இந்தியாவும் (15.4 ஜிகா வாட்ஸ் - GW) பெற்றுள்ளது.



CHENNAI - 9445065552 / 9445095552 | KOVILPATTI - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **உலகளாவிய அமைதி குறியீடு 2022**
  - உலகளாவிய அமைதி குறியீடு (Global Peace index) 2022-ல் இந்தியா 135-வது இடத்தை பிடித்து உள்ளது. 2021-ம் ஆண்டு பட்டியலில் இந்தியா 138-வது இடத்தில் இருந்தது .
  - பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனம் சர்வதேச சிந்தனைக் குழுவான இன்ஸ்டிடியூட் பார் எகனாமிக்ஸ் அண்ட் பீஸ் (Institute for Economics and Peace) வெளியிட்டுள்ள உலகளாவிய அமைதி குறியீடு-2022 அறிக்கையின்படி, ஐஸ்லாந்து, நியூசிலாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகள் முதல் மூன்று இடங்களில் உள்ளன.
  - இந்த அறிக்கையில் உலகின் 163 சுதந்திர நாடுகள் இடம்பெற்று உள்ளன.
- **UNCTAD - உலக முதலீட்டு அறிக்கை-2021 : இந்தியா 7வது இடம்**
  - ஐக்கிய நாடுகளின் வர்த்தகம் மற்றும் வளர்ச்சிக்கான மாநாடு (UNCTAD) ஆண்டு உலக முதலீட்டு அறிக்கையை வெளியிட்டுள்ளது. அறிக்கையின் சிறப்பம்சங்கள்: நாட்டிற்குள் வரும் அன்னிய நேரடி முதலீடு (FDI) 30% சரிந்தாலும் இந்தியா ஏழாவது இடத்தில் உள்ளது.
  - அமெரிக்கா ($367 பில்லியன்) அன்னிய நேரடி முதலீட்டில் முதலிடத்திலும், சீனா ($181 பில்லியன்) மற்றும் ஹாங்காங் ($141 பில்லியன்) ஆகியவை முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டன.
- **உலகளாவிய ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பு (Global Startup Ecosystem)**
  - 2022-ம் ஆண்டுக்கான உலகளாவிய ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் தரவரிசை அறிக்கையில், கேரளா ஆசியாவில் முதலிடத்தில் உள்ளது. உலகளாவிய தரவரிசையில் நான்காவது இடத்தில உள்ளது.
  - ஸ்டார்ட்-அப் ஜீனோம் நிறுவனம் மற்றும் உலகளாவிய தொழில்முனைவோர் நெட்வொர்க் ஆகிவை இணைந்து தரவரிசையை வெளியிட்டுள்ளது.

THULIRR IAS ACADEMY
நுண்பொருள் காண்ப தறிவு | முயற்சி திருவினையாக்கும்
TNPSC
GROUP I / II / IIA / IV & VAO
ONLINE / OFFLINE CLASSES
ADMISSION GOING ON
CHENNAI - 9445065552 / 9445095552
KOVILPATTI - 9444206805 / 9444206905



**CHENNAI** - 9445065552 / 9445095552 | **KOVILPATTI** - 9444206805 / 9444206905
www.thulirriasacademy.in | thulirriasacademy@gmail.com

- **சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு 2022** : **இந்தியா நிராகரித்துள்ளது**
  - சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீட்டு (EPI) 2022 இல் 180 நாடுகளில் இந்தியா கடைசி இடத்தில் (180-வது) உள்ளதாக யேல் மற்றும் கொலம்பியா பல்கலைக்கழகம் (Yale and Columbia University) தெரிவித்துள்ளது.
  - சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடானது (EPI) என்பது 2002 இல் உலகப் பொருளாதார மன்றத்தால் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக் குறியீடாக, சுற்றுச்சூழல் சட்டம் மற்றும் கொள்கைக்கான யேல் மையம் மற்றும் சர்வதேச புவி அறிவியல் தகவல் வலையமைப்பிற்கான கொலம்பியா பல்கலைக்கழக மையம் ஆகியவற்றுடன் இணைந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை அறிமுகப்படுத்தப்பட்ட குறியீடாகும்.
  - **இந்தியா நிராகரிப்பு:** மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம், அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு 2022-க்கு மறுப்பு தெரிவித்துள்ளது. சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு 2022 அடிப்படை ஆதாரமற்ற மற்றும் அறிவியல்பூர்வமற்ற முறையிலும், வெற்று யூகங்களின் அடிப்படையிலும் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
  - **குறிப்பு:** புதிய குறியீடு, மிகக்குறைந்த கரியமில வாயு உமிழ்வு தொடர்பான வரலாற்று தரவுகளை மறைத்துள்ளது. விவசாயிகள் அதிகம் உள்ள வளரும் நாடுகளுக்கு, மண் ஆரோக்கியம், வேளாண் பல்லுயிர், உணவு இழப்பு மற்றும் கழிவுகள் உள்ளிட்டவை முக்கியமானவை. இவை புதிதாக வெளியிடப்பட்டுள்ள, சுற்றுச்சூழல் செயல்திறன் குறியீடு 2022 சேர்க்கப்படவில்லை.
- **உலக போட்டித்திறன் குறியீடு 2022 : இந்தியா 37-வது இடம்**
  - 2022ஆம் ஆண்டுக்கான உலகப் போட்டித்திறன் குறியீட்டில் 43வது (2021) இடத்திலிருந்து 37வது இடத்திற்கு முன்னேறியுள்ளது.
  - மேலாண்மை மேம்பாட்டுக்கான சர்வதேச நிறுவனம் (IMD) வெளியிட்டது.
  - 63 நாடுகள் கொண்ட பட்டியலில் டென்மார்க் முதல் இடத்தில் உள்ளது. இது 2021 இல் மூன்றாவது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.
  - சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர் ஆகிய நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

## புத்தகம்

- **'வாழ்வில் வளம் பெற வள்ளுவம்'** எனும் புத்தகம் - ஆசிரியர் இரா.பூரணலிங்கம் ஐ.ஏ.எஸ் (ஓய்வு).
- **இந்திய அரசியல் சாசனம்; சொல்லப்படாத கதை** (Bhartiya Samvidhan: Ankahi Kahani') புத்தகம் - ஆசிரியர் ராம் பகதூர் ராய்

## முக்கிய தினம்

1. ஜூன் 1 - உலக பால் தினம்
2. ஜூன் 2 - சர்வதேச பாலியல் தொழிளாளர்கள் தினம்
3. ஜூன் 3 - உலக மிதிவண்டி தினம்
4. ஜூன் 5 - உலக சுற்றுசூழல் தினம்
5. ஜூன் 7 - உணவு பாதுகாப்பு தினம்
6. ஜூன் 8 - உலக பெருங்கடல் தினம்
7. ஜூன் 12- குழந்தை தொழிலாளர்களுக்கு எதிரான உலக தினம்
8. ஜூன் 12 முதல் 20 வரை உலக குழந்தை தொழிலாளர் ஒழிப்பு வாரம்
9. ஜூன் 14 - உலக ரத்த தான தினம்
10. ஜூன் 15 - உலக முதியோர் துஷ்பிரயோக விழிப்புணர்வு தினம்
11. ஜூன் 15 - உலக காற்று தினம்
12. ஜூன் 16 - உலக கடல் ஆமை தினம்
13. ஜூன் 17 - பாலைவனமாதல் மற்றும் வறட்சிக்கு எதிரான உலக தினம்
14. ஜூன் 19 - தேசிய வாசிப்பு தினம்
15. ஜூன் 20 - உலக அகதிகள் தினம்
16. ஜூன் 21 - சர்வதேச யோகா தினம்
17. ஜீன் 21 - உலக இசை தினம்
18. ஜீன் 21 - உலக நீர்நிலையியல் தினம்
19. ஜீன் 23 - ஐ.நா.பொது சேவைகள் தினம்
20. ஜீன் 23 - சர்வதேச ஒலிம்பிக் தினம்
21. ஜீன் 23 - சர்வதேச விதவைகள் தினம்
22. ஜூன் 25 - சர்வதேச மாலுமிகள் தினம்
23. ஜூன் 26 - சர்வதேச போதைப் பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தல் தடுப்பு தினம்
24. ஜூன் 27 - குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தினம்
25. ஜூன் 28 - தேசிய காப்பீட்டு விழிப்புணர்வு தினம்
26. ஜூன் 29 - தேசிய புள்ளியியல் தினம்